CC 235/2017

12.11.2025

அ.சா.1 ,

பெயர்: முத்துலட்சுமி, க/பெ. தங்கவேல்

அ.சா.1 CMP No.1437/2025.-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கிழமேல் ரோட்டில்தான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். கிழமேல் ரோட்டில் வடபுறமாக மரத்தடியில் நானும், முத்துக்குமாரும், எனது பேரன் மதன்குமாரும் நின்றுக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். சுமார் 25 ரேக்ளா வண்டிகள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது என்றால் சரிதான்.

என் மகன் மற்றும் பேரன் மீது மோதிய ரேக்ளா வண்டியில் வெள்ளை மற்றும் செவளை நிற காளைகள் பூட்டப்பட்டிருந்தது என்றால் சரிதான். 25 வண்டிகளில் 6 வது வண்டி வந்து மோதியது. வண்டியின் இடதுபக்கம் மோதியது. வண்டியில் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றும், யார் ஓட்டி வந்தார்கள் என்றும் நான் பார்க்கவில்லையென்றால் சரிதான்.

பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு முதலில் சிகிச்சைக்காக சென்றோம், பின்னர் அருண் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோது, போலிசார் அங்கு வைத்து என்னை விசாரித்தார்கள். நான் தற்போது நீதிமன்றத்தில் கூறிய விவரங்களைதான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் மருத்துவமனையில் வைத்து கையெழுத்து செய்தேன். கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/- Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.